புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் வட்டம், சித்தன்னவாசல் சுற்றுலா தலத்திற்கு, தமிழ்நாட்டின் கலாச்சார உறவுகளை மேம்படுத்தும் "வேர்களைத் தேடி" திட்டத்தின்கீழ், வருகைபுரிந்துள்ள அயலகத் தமிழ் இளைஞர்களை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி , மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, தலைமையில் 07.08.2024 அன்று வரவேற்று தமிழ், தமிழர் வாழ்க்கை முறை, பண்பாடு குறித்து கலந்துரையாடினார். உடன் இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் திருமதி. தெய்வநாயகி, அன்னவாசல் ஒன்றியக் குழுத் தலைவர் வி.ராமசாமி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

குண்டடம் ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில்

ரூ.2.62 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டப்பணிகள் துவக்கிவைப்பு!

முடிவுற்ற பணிகளை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் திறந்து வைத்தார் !

திருப்பூர், ஆக. 15 -

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் திருப்பூர் மாவட்டம், குண்டடம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் முதலமைச்சரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் ரூ.2.62 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டப்பணிகளை துவக்கி வைத்து, முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தார்.

திருப்பூர் மாவட்டம், குண்டடம் ஊராட்சி ஒன்றியம், செங்கோடம்பாளையம் ஊராட்சி, காசிலிங்கம்பாளையத்தில் முதலமைச்சரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் ஊதியூர் வஞ்சிபாளையம் சாலையிலிருந்து காசிலிங்கம்பாளையம் செல்லும் சாலை புதுப்பிக்கும் பணிகளை துவக்கி வைத்து, குருக்கம்பாளையம் ஊராட்சி, குருக்கம்பாளையத்தில் முதலமைச்சரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.33.00 இலட்சம் மதிப்பீட்டில் குருக்கபாளையத்திலிருந்து மயானம் வழியாக செல்லும் சாலைப் பணி0களை துவக்கி வைத்து,

எல்லப்பாளையம்புதூர் ஊராட்சி, எல்லப்பாளையத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத் தின் கீழ் ரூ,19.41 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட எல்லப்பாளையம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கக்கட்டடத்தை திறந்து வைத்து, சாய்ராம் நகரில் ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு மி ன்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் காங்கேயம் கோட்டத்தின் கீழ் உள்ள பகுதிகளில்,

குறைந்த மின்ன ழுத்தம் உள்ள 40 இடங்களில் புதிதாக 25 கே.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றிகளை அமைக்கும் பணி என மொத்தம் ரூ.2.62 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டப்பணி களை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்து, முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் கோ.மலர்விழி, ஒன்றிய கழக செயலாளர்கள் சிவ.செந்தில்குமார் குண்டடம் கிழக்கு, எஸ்.சந்திரசேகர் குண்டடம் மேற்கு, பொதுக்குழு உறுப்பினர் கே.எஸ்.கருணாகரன், மாவட்ட முன்னாள் அவைத்தலைவர் மு.சிவசபாபதி, ஒன்றிய அவைத்தலைவர் ராஜு (எ) கிருஷ்ணசாமி, பொருளாளர் நல்லசாமி, ஆரத்தொழுவு ஊராட்சி மன்றத்தலைவர் எ.முருகன், துணைத்தலைவர் ராசு (எ) முருகேசன், ஒன்றியக்குழு உறுப்பினர் பா.சித்ரா, ஊதியூர் பெரியசாமி, மாவட்டப் பிரதி நிதிகள் தேவராஜ்,

துரைசாமி, தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் செந்தில் அரசன், தமிழ் நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்செயற் பொறியாளர் ராஜாசந்தர சேகர், உதவி செயற்பொறியளார் விமலாதேவி, காங்கேயம் வட்டாட்சியர் மயில்சாமி, குண்டடம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சுரேஷ்குமார், ஜெயக்குமார், உதவி பொறியாளர்கள் கார்த்திக் ராஜா, லோகேஷ்குமார் உள்பட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் துறை சார்ந்த அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஒன்றிய அரசின் தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் ஒன்றிய மக்கள் தொடர்பகம் சார்பில்

பெரம்பலூரில் அரசின் மக்கள் நலத் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி!

கே.என்.அருண் நேரு எம்.பி. தொடங்கி வைத்தார்!

பெரம்பலூர், ஆக, 15 -

மத்திய அரசின் தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் மத்திய மக்கள் தொடர்பகம் சார்பில் பெரம்பலூரில் அரசின் மக்கள் நல திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நகராட்சிக்குட்பட்ட ராசி மண்டபத்தில் நடைபெற்றது.

இரண்டு நாட்கள் நடைபெறவுள்ள இந்நிகழ்ச்சியை பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.என்.அருண்நேரு தொடங்கி வைத்தார்

இதில் மாவட்ட வருவாய் அலுவலர் மு.வடிவேல் பிரபு தலைமை வகித்தார். பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ம.பிரபாகரன் முன்னிலை வகித்தார்.

பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் பேசியதாவது:

பொதுமக்கள், கல்லூரி, பள்ளி மாணவ, மாணவிகள் அரசின் திட்டங்களை முழுமையாக அறிந்து கொண்டு பயன்படுத்திக் கொள்ளவேண்டும். மத்திய, மாநில அரசுகளின் போட்டித் தேர்வுகளில் பங்கேற்க மாணவ - மாணவிகளுக்கு அரசின் சார்பில் பல்வேறு உதவிகள் சிறப்பு வகுப்புகள் நடத்தப்படுகின்றது. அவற்றை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். போட்டித் தேர்வுகளில் கலந்துகொண்டு வெற்றி பெற்று அரசு வேலை வாய்ப்புகளை பெற அனைவரும் முயற்சி எடுக்க வேண்டும். மாணவ - மாணவிகளுக்கு கல்விக் கடனுதவி கிடைப்பதற்கு சிறப்பு முகாம்களை நடத்த மாவட்ட முன்னோடி வங்கி மற்றும் இதர வங்கிகளுக்கு அறிவுறுத்தியுள்ளோம். அனைவரும் நன்கு படித்து, நல்ல மனிதர்களாக உருவாக மனதார வாழ்த்துகின்றேன்.

இவ்வாறு தெரிவித்தார்.

பின்னர் பல்வேறு விழிப்புணர்வு போட்டிகளில் வெற்றிப் பெற்ற கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள் பரிசுகளை வழங்கி பாராட்டினார்.

முன்னதாக சுகாதார பணிகள் துணை இயக்குநர் மருத்துவர் பிரதாப் குமார், காசநோய் துணை இயக்குநர் மருத்துவர் நெடுஞ்செழியன், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் பரத்குமார், ஸ்ரீரங்கம் அஞ்சலக கோட்ட கண்காணிப்பாளர் பழனிசாமி , ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் சமூக நல அலுவலர் ஜெயஸ்ரீ, கிராம சுய வேலைவாய்ப்பு பயிற்சி மைய இயக்குனர் ஆனந்தி ஆகியோர் அவர்களது துறைகள் சார்பில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து விளக்கி கூறினர்.

நிகழ்ச்சியில் அஞ்சல் துறை மூலம் தேசிய கொடி வழங்கல் மற்றும் செல்வ மகள் சேமிப்பு திட்டம் தொடர்பான விழிப்புணர்வு கையேடுகள் வெளியிடப்பட்டது. இதில் பெண் குழந்தையை காப்போம் பெண் குழந்தைக்கு கற்பிப்போம், மாத்ரு வந்தனா, திறன் இந்தியா, டிஜிட்டல் இந்தியா உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

மேலும் சுகாதார துறை, அஞ்சல் துறை, காசநோய் பிரிவு, சமூக நலத்துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம், முன்னோடி வங்கி போன்ற துறைகளின் சார்பில் திட்டங்கள் குறித்த கண்காட்சி இடம் பெற்றிருந்தது. கிராமிய கலை நிகழ்ச்சிகள் நடந்தது.

இந்நிகழ்ச்சியில் நகராட்சி தலைவர் அம்பிகா, திருச்சி கள விளம்பர அலுவலர் தேவிபத்மநாபன், ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர்கள் என்.கிருஷ்ணமூர்த்தி(ஆலத்தூர்), மீனா அண்ணாத்துரை(பெரம்பலூர்), க.ராமலிங்கம் (வேப்பந்தட்டை), மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் தழுதாழை.பாஸ்கர், நகராட்சி துணை தலைவர் து.ஆதவன்(எ)ஹரிபாஸ்கர் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், துரையரசபுரம் கிராமத்தில் நடைபெற்ற "மக்களுடன் முதல்வர்" திட்ட முகாமில், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் 06.08.2024 அன்று மனுக்களை பதிவு செய்யும் சிறப்பு முகாமினை பார்வையிட்டு, மக்களிடம் கோரிக்கைகள் குறித்த விவரங்களை கேட்டறிந்தார். உடன் அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர் ச.சிவக்குமார், அறந்தாங்கி ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.மகேஸ்வரி சண்முகநாதன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியனை நேற்று முன்தினம் (13.08.2024) சென்னை, முகாம் அலுவலகத்தில், சென்னை மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.தேரணிராஜன் சந்தித்து, National Institutional Ranking Framework (NIRF) இல் சென்னை மருத்துவக் கல்லூரி 2024-ஆம் ஆண்டு 10வது இடம் பிடித்ததற்கான சான்றிதழ் காண்பித்து வாழ்த்துப் பெற்றார். மாநில அரசுகள் நடத்துகின்ற மருத்துவ இளங்கலை மற்றும் முதுகலை கல்லூரிகளில் இந்திய அளவில் சென்னை மருத்துவக் கல்லூரி முதல் இடத்தைப் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் சென்னை மருத்துவக் கல்லூரி துணை முதல்வர் மரு.கவிதா, நோடல் அலுவலர் மரு.அன்புச்செல்வி ஆகியோர் உடனிருந்தனர்.

சென்னை மருத்துவக் கல்லூரிக்கு

தேசிய தர வரிசைப் பட்டியலில் 10-ஆம் இடம்!

சான்றிதழை - அமைச்சர் மா.சுப்பிரமணியனிடம் காண்பித்து வாழ்த்து!

சென்னை, ஆக.15 -

சென்னை மருத்துவக் கல்லூரி 2024 ஆம் ஆண்டு, National Institutional Ranking Framework (NIRF) தரவரிசை பட்டியலில் 10-ஆம் இடமும், மாநில அரசுகள் நடத்தும் இளங்கலை மற்றும் முதுகலை மருத்துவக் கல்லூரிகளின் வரிசையில் இந்திய அளவில் முதல் இடமும் பிடித்துள்ளது. மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்களிடம் சான்றிதழ் காண்பித்து வாழ்த்து பெறப்பட்டது.

இந்தியாவில் உள்ள மொத்த அரசு மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரிகள் எண்ணிக்கை 706, அதில் National Institutional Ranking Framework (NIRF) இல் கலந்து கொண்ட அரசு மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கை 182 ஆகும்.

இந்தியா முழுவதும் நான்கு பகுதிகளாக பிரிக்கப்பட்டு அதாவது, தெற்கு பகுதியில் 76 மருத்துவக் கல்லூரிகள், வடக்கு பகுதியில் 43 மருத்துவக் கல்லூரிகள், கிழக்கு பகுதியில் 14 மருத்துவக் கல்லூரிகள், மேற்கு பகுதியில் 49 மருத்துவக் கல்லூரிகள் என்று மொத்தம் 182 அரசு மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரிகள் விண்ணப்பித்திருந்தது.

இதில் இளங்கலை மற்றும் முதுகலை மருத்துவக் கல்லூரிகளின் வரிசையில் 2024-ஆம் ஆண்டு சென்னை மருத்துவக் கல்லூரி 10-ம் இடமும், மாநில அரசுகள் நடத்தும் இளங்கலை மற்றும் முதுகலை மருத்துவக் கல்லூரிகளின் வரிசையில் இந்திய அளவில் முதல் இடமும் பிடித்திருப்பது சிறப்பிற்குரியது.

கடந்த காலங்களில் 2019-ஆம் ஆண்டு 16-ஆம் இடமும், 2021-ஆம் ஆண்டு 14-ஆம் இடமும், 2022-ஆம் ஆண்டு 12-ஆம் இடமும், 2023-ஆம் ஆண்டு 11-ஆம் இடமும் பிடித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இந்த ஆண்டு (2024) National Institutional Ranking Framework (NIRF) இல் சென்னை மருத்துவக் கல்லூரி 10-வது இடம் பிடித்துள்ளது சிறப்பிற்குரியது.

இந்த சான்றிதழ் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்களிடம் சென்னை மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.தேரணிராஜன் காண்பித்து வாழ்த்து பெற்றார். இந்நிகழ்வில் சென்னை மருத்துவக் கல்லூரி துணை முதல்வர் மரு.கவிதா, நோடல் அலுவலர் மரு.அன்புச்செல்வி ஆகியோர் உடனிருந்தனர்.

தொடர் விடுமுறையை முன்னிட்டு சிறப்புப் பேருந்துகள் இயக்கம்!

சென்னை, ஆக. 15 -

அரசு விரைவு போக்குவரத்துக்கழகம் வெளியிட்டு உள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:

சுதந்திர தினம் மற்றும் தொடர் விடுமுறையை முன்னிட்டு இன்று (புதன் கிழமை) சென்னையில் இருந்தும் மற்றும்

பிற இடங்களில் இருந்தும் தினமும் இயக்கப்படும் பஸ்களுடன் கூடுதலாக சிறப்பு பஸ்கள் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்படி, சென்னை கிளாம்பாக்கத்தில் இருந்து திருவண்ணாமலை, திருச்சி, கும்பகோணம், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில், கன்னியாகுமரி,

தூத்துக்குடி, கோயம்புத்தூர், சேலம், ஈரோடு, திருப்பூர் ஆகிய இடங்களுக்கு இன்று 470 பஸ்களும், வெள்ளி மற்றும் சனிக்கிழமை 365 பஸ்களும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், சென்னை கோயம்பேட்டில் இருந்து திருவண்ணாமலை, நாகை, வேளாங்கண்ணி, ஒசூர், பெங்களூரு ஆகிய இடங்களுக்கு நாளை 70 பஸ்களும், வெள்ளிக் கிழமை மற்றும் சனிக்கிழமை 65 பஸ்களும் இயக்கப்பட உள்ளன.

பெங்களூர், திருப்பூர், ஈரோடு மற்றும் கோவை ஆகிய இடங்களில் இருந்தும் பல்வேறு இடங்களுக்கும் 200 சிறப்பு பஸ்களும், மாதவரத்தில் இருந்து புதன், வெள்ளி மற்றும் சனிக்கி ழமை ஆகிய நாள்களில் 20 சிறப்பு பஸ்கள் என ஆக மொத்தம் 1190 சிறப்பு பஸ்கள் இயக்கப்படுகிறது.

மேலும், வருகிற 18 ந்தேதி (ஞாயிற்றுக்கிழமை) சொந்த ஊர்களில் இருந்து சென்னை மற்றும் பெங்களூர் திரும்ப வசதியாக பயணிகளின் தேவைகேற்ப அனைத்து இடங்களில் இருந்தும் சிறப்பு பஸ்கள் இயக்கப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

பெரம்பலூர் மாவட்டம் வேப்பந்தட்டையில்

'மக்களுடன் முதல்வர்' திட்ட முகாம் - பொதுமக்களின் கோரிக்கை மனுக்கள்!

கே.என்.அருண் நேரு எம்.பி.- ம.பிரபாகரன் எம்.எல்.ஏ. பெற்றனர்!

பெரம்பலூர், ஆக,15 -

பெரம்பலூர் மாவட்டம் வேப்பந்தட்டையில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் திட்ட முகாமில் பெரம்பலூர் பாராளுமன்ற உறுப்பினர் கே.என். அருண் நேரு, பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ம. பிரபாகரன் ஆகியோர் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டனர்!

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை காந்தி மஹாலில் வேப்பந்தட்டை மற்றும் அன்னமங்கலம் ஊரட்சியைச் சேர்ந்த கிராம மக்களுக்கான "மக்களுடன் முதல்வர்" திட்ட சிறப்பு முகாம் நடைபெற்றது. இம்முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் கிரேஸ் பச்சாவ் பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.என்.அருண் நேரு, பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ம.பிரபாகரன் ஆகியோர் நேரில் பார்வையிட்டு பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டனர். முதலமைச்சர் அவர்களின் சிறப்புத் திட்டங்க ளில் ஒன்றான மக்களுடன் முதல்வர் என்ற சிறப்புத் திட்டத்தின் கீழ் பொதுமக்கள் வசிக்கும் இடங்களுக்கே அரசு அலுவலர்கள் நேரில் சென்று கோரிக்கை மனுக்கள் பெற்று அதற்கு தீர்வு காணும் ஒரு உன்னத திட்டமான இத்திட்டம் பெரம்பலூர் மாவட்டத்தில் நகரப்பகுதிகள், பேரூராட்சிகளில் ஏற்கனவே நடைபெற்று முடிவடைந்த நிலையில், தற்போது ஊரகப்பகுதிகளுக்கு விரிவுபடுத்தப்பட்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 11.07.2024 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

அதனடிப்படையில், வேப்பந்தட்டை வட்டத்தில் அன்னமங்கலம் மற்றும் வேப்பந்தட்டை ஊராட்சி கிராம மக்களுக்காக நடைபெற்ற மக்களுடன் முதல்வர் திட்ட முகாமினை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கிரேஸ் பச்சாவ், பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.என்.அருண் நேரு, பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ம.பிரபாகரன் ஆகியோர் பார்வையிட்டு, பொதுமக்களிடம் கோரிக்கை தொடர்பாக கேட்டறிந்து, மனுக்கள் பெற்றும் தொடர்புடைய அலுவலர்களிடம் மனுக்களை வழங்கி மனு மீது விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தினார்கள்.

பின்னர், மக்களுடன் முதல்வர் திட்ட முகாமில் அனைத்துத்துறைகளின் வாயிலாக அமைக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கு அளிக்கப்படும் சேவைகள் தொடர்பான அரங்குகளை அனைவரும் பார்வையிட்டு, பொதுமக்களுக்கு அரசின் நலத்திட்டங்கள் குறித்து விழிப்பு ணர்வு ஏற்படுத்திடவும் கோரிக்கை மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளவும் அறிவுறுத்தினர். இன்றைய முகாமில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி 270 மனுக்கள் பெறப்பட்டுள்ளது.

இதில் வேப்பந்தட்டை ஒன்றியக்குழுத்தலைவர் க.ராமலிங்கம், வேப்பந்தட்டை வட்டாட்சியர் மாயகிருஷ்ணன், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் தழுதாழை.பாஸ்கர், ஊராட்சி மன்ற தலைவர்கள் தனலட்சுமி கலியமூர்த்தி (வேப்பந்தட்டை), மருதாம்பாள் செல்வகுமார் (அன்னமங்கலம்) மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்,

நாகை மாவட்டம் வேதாரண்யம் ஆற்காட்டுத்துறை மீனவர்கள் 4 பேர் இந்திய கடல் எல்லையில் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது இலங்கை கடற்கொள்ளையர்களால் தாக்கப்பட்டதால் பலத்த காயம் ஏற்பட்டு நாகை மாவட்டம் வேதாரண்யம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இதையடுத்து கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் மீனவர்களை தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழக தலைவரும் நாகை மாவட்ட கழக செயலாளருமான என்.கௌதமன் நேரில் சென்று பார்வையிட்டு ஆறுதல் கூறி நிதி உதவி வழங்கினார். உடன் வேதாரண்யம் நகர கழக செயலாளரும், நகர மன்ற தலைவருமான மா.மீ.புகழேந்தி வேதாரண்யம் மேற்கு ஒன்றிய செயலாளர் உதயம் வே.முருகையன் மற்றும் ஆற்காட்டுத்துறை மீனவ கிராம பஞ்சாயத்தார்கள் உள்ளனர்.